DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 1070/2025

PROSECUTION WITNESS L.W.2/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவக்குமார் | தகப்பனார் பெயர் | நடராஜன் |
| கிராமம் | | ஊர் | |
| தொழில் | தலைமை காவலர் | வயது | |

எதிரி ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 18.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, வடக்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 22.09.2024 ம் தேதி 13.00 மணிக்கு வடக்கு காவல் நிலையத்தில் நானும் என்னுடன் தலைமை காவலர் 867 சரவணகுமார் என்பவரும் இருந்த போது உதவி ஆய்வாளர் பூபாலன் அவர்கள் எங்களை அழைத்ததன் பேரில் அவருடன் குற்றம் நடவாமல் பார்த்துக்கொள்ளவும் சரக எல்லைக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் கண்காணித்து கொண்டிருந்த போது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் ஆண்டவர் வீதி, ரங்கீலா பஞ்சாபி அருகே நின்று கடையை கண்காணித்து கொண்டிருந்த போது கடைக்குள் இருந்த நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டவுடன் ஓடிவிட்டார். அருகில் சென்று பார்த்தபோது அந்த இடத்தில் 180 ML அளவுள்ள பாட்டிலில் 90 ML அளவு கொண்ட மதுபானம் இருந்தது. அதனுடன் Use and throw டம்ளர் ஒன்று இருந்தது. கடையை நடத்துபவரை அழைத்து விசாரித்து அவர் தானாக முன்வந்து தனது பெயர் அருள், த/பெ.கோபால், குமலங்குட்டையில் வசிப்பதாகவும் அரசு மதுபானத்தை அருந்த தான் அனுமதித்ததாகவும் அவரே ஒப்புக்கொண்டதன் பேரில் கைது செய்வதற்கான காரணத்தை அவருக்கு எடுத்துக் கூறி 14.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கைது செய்தார். வழக்கு சொத்துக்களை கைப்பற்றி பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் என்னுடன் வந்த தலைமை காவலர் சரவணகுமார் இருவரும் சாட்சிகளாக கையொப்பம் இட 14.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சொத்துக்களுடன் அருள் என்பவரை அங்கிருந்து அழைத்துக்கொண்டு 15.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 418/2024 ச/பி.4(1)(k) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். உதவி ஆய்வாளர் விசாரிக்க நடந்ததை சொன்னேன்.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.18 17:39:13 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள தப்பி ஓடிய நபரை பற்றி விசாரித்து அவர் பற்றிய விவரங்களை இறுதி அறிக்கையில் கூறப்படவில்லை என்றால் ஆமாம். ரங்கீலா பஞ்சாபி ஹோட்டலில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 180 ML அளவு கொண்ட ஒரு பாட்டிலை ஒரு நபர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்து ஹோட்டலுக்கு எடுத்து வர முடியும் என்றால் ஆமாம். Use and throw டம்ளரை ஹோட்டலில் பொதுவாக வைத்திருப்பார் என்றால் ஆமாம். ரங்கீலா ஹோட்டலை யார் நடத்தி வருகிறார்கள் என்பதற்காக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். புள்ளிவிவர கணக்கிற்காக உயர் அதிகாரிகளின் ஆணைக்கு இணங்க எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.18 17:39:19 +0530

Judicial Magistrate No.I,
Erode.